4. அறிவிப்பு

பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளுக்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

25—3—1981 (புதன்) முதல் 30—3—1981 (திங்கள்) முடிய	ஏற்கனவே அறிவித்தபடி—மாறுதல் இல்லை.
31—3—1981 (செவ்வாய்) 1—4—1981 (புதன்)	மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும். 39—சாலைகளும் பாலங்களும். 52—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
2—4—1981 (வியாழன்) 3—4—1981 (வெள்ளி)	ஏற்கனவே அறிவித்தபடி 36—பாசனம். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு
4—4—1981 (சனி)	அரசினர் சட்ட முன் வடிவுகள். 1. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கால் நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்டமுன்வடிவு. 2. கோவை மாநகராட்சி சட்டமுன் வடிவு. 3. 1981ஆம் ஆண்டு சிறைக்கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 24] [பேரவைத் துணைத் தலைவர்]

4. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்டமுன்வடிவு.

5. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மின் சார வாரியம் (நிலுவைத் தொகை களை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு.

5—4—1981 (ஞாயிறு) விடுமுறை.

6—4—1981 (திங்கள்)
7—4—1981 (செவ்வாய்)

அரசினர் சட்ட முன்வடிவுகள்.
1. 4—4—1981 அன்று முடிவு பெறாது விடுபட்ட சட்ட முன் வடிவுகள்.
2. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பரா மாரிப்புச் சட்ட முன் வடிவு.

மற்ற மானியக் கோரிக்கைகள் என்று எடுத்துக் கொள்ளப் படும் என்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

ஏற்கனவே அறிவித்தபடி 31—3—1981, 1—4—1981, 2—4—1981 மற்றும் 3—4—1981 அன்று எடுத்துக் கொள்ளப் பெறும் மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங் களைக் கொடுப்பதற்கான கடைசி நாள்—26—3—1981, பிற் பகல் 3 மணி.

ஏனைய மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங் கள் கொடுப்பதற்கான கடைசி நாள் 28—3—1981 பிற்பகல் 3 மணி.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

3. வரவு-செலவுத் திட்டம், 1981-82 விவாதம்—தொடர்ச்சி.

*திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த மைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடுமையான வறட்சி தமிழகத்தைக் கவ்வியுள்ள இந்த நேரத்தில் போர்க் கால நடவடிக்கையாகத் திட்டங்களைத் தீட்டி, கிராமங்களிலே